# திராவிடநாடு

8—12—57 | வார வெளியீடு | விலை 16 காசு


# பொறுப்பாரோ?

(கவிஞர் வாணிதாசன்)

அன்னை மொழிக்(கு), இந்தி
இன்னல் வருகு தென்றால்
தென்னவர் பொறுப்பாரோ?—நம்
முன்னவர் பொறுத் 'தாரோ?

முன்னர் அரசாண்ட மூவேந்தர் இல்லையெனில்
இந்நாள் உயிர்வாழ்வோர் எலியென்று நினைத்தாயோ?

சுயநலப் பெருந்தோளும் சூம்பற்றோ ளானாலும்
தோள்வலி நனிஇல்லார் அரசிய லிருந்தாலும்
அயலவர் மொழிஇந்தி பின்புறம் நுழைந்தாலும்
அடுக்களை மணையுண்டு கைகால்கள் சோர்ந்தாலும்

அரிவையர் திருக்கூட்டம் அடங்கியே இருந்தாலும்
ஆண் இனக் கோழைகள் வாய்பொத்திக் கிடந்தாலும்
வாடிணி தோழியே! இந்தி வருகுதென்றால்
வாளெடுப்போம் கலங்கேல் நீயுண்டு நானுண்டே!!

## கேள்வி! சேதி!

மக்களுக்காகத்தான் சட்டங்களே ஒழிய, சட்டங்களுக்காக மக்கள் அல்ல என்கிறகருத்தை அண்மையில் நேரு பண்டிதர் தெரிவித்திருக்கிறார்! சிறிது காலத்துக்கு முன்பு டில்லி அருகே ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துவதில், அவர் அதிசிரத்தை எடுத்துக்கொண்டாராம். ஆனால், கூட்டுறவுக்கழகப் பதிவாளர், வியக்கத்தக்க முறையில் கேள்விமேல் கேள்வியாக அடுக்கிக்கொண்டுபோனதைக் கண்டு, திகைப்படைந்தாராம் அவர். "அரசினர் அல்லது பதிவாளர் ஒவ்வொரு வித்த்திலும் இடையூறு செய்துவந்தார்கள். எட்டுமாத காலத்திற்குப் பிறகே என் முயற்சி பலனளித்தது. எனக்கே இவ்வளவு கடினமாக இருந்தது என்றால், கூட்டுறவுக் கழகம் அமைக்க முயலும் ஏழை விவசாயி அல்லது வேறு எவருக்கும் எவ்வளவு கடினமாக இருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளுங்கள்" என்று நவம்பர் 28-ல் புது டில்லியில் நிருபர்கள் கூட்டத்தில்சொல்லியிருக்கிறார்! தனது ஆட்சிபற்றி, தானே வருந்துகிறார், நேரு — எப்படி நிலைமை!!

*

"இந்த சர்க்கார் — மத்திய சர்க்காரும் சரியே, ராஜ்ய சர்க்கார்களும் சரியே சர்வாதிகாரப் போக்கில் சென்றுகொண்டிருக்கின்றன. சர்க்கார் இலாகாக்களிலே ஏகாதிபத்திய மனப்பான்மை வளர்ந்துகொண்டிருக்கிறது. சர்க்காரிலே உள்ள இந்தச் சர்வாதிகார மனப்பான்மைகொண்டவர்களை வெளியேற்றவேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்களில் வளர்ந்து வருகிற பிற்போக்கு மனோபாவம், முதலாளித்துவ எண்ணம், ஆதிக்கப் போக்கு, வகுப்புத் துவேஷம் இவற்றைக் களைந்தெறிய வேண்டும்......"—இவ்வாறு பேசியிருக்கிறவர் யார் தெரியுமா! எதிர்க் கட்சிக்காரர்களோ. என்றெண்ணுவீர்கள். அல்ல, அல்ல !! டில்லியில் சமூக நல திட்ட அமைச்சராக விளங்கும், எஸ்.கே. டே. சென்னை மாநில பஞ்சாயத்து யூனியன்களின் 5-வது மகாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

*

இந்திய துணைக்கண்டத்தின் மிகப் பெரிய மாகாணம் எது தெரியுமா? ஆலைவளம் கொழிக்கும் பம்பாய்தான்! மிகச் சிறிய மாகாணம் கேரளமாம்!! பம்பாய் மிகப் பெரிய மாகாணமே ஒழிய, மக்கள் தொகையில் முதலிடம் வகிப்பது நேருவுடைய ஐக்கிய மாகாணம் தான். பல்வேறு மாகாணங்களின் மக்கள் தொகை விபரம் பின்வருமாறு :- ஆந்திரா 310-இலட்சம், பீகார் 380 இலட்சம், கேரளம் 130 இலட்சம், மத்திய பிரதேசம் 260 இலட்சம், மைசூர் 190 இலட்சம், ஒரிஸ்ஸா 140 இலட்சம், பஞ்சாப் 160-இலட்சம், மேல்வங்கம் 260-இலட்சம், டில்லி - இமாசலப் பிரதேசம் 10 இலட்சம், தமிழகம் 300 இலட்சம், அஸ்ஸாம் 90 இலட்சம், மணிப்பூர் - திரிபுரா 50 ஆயிரம். இந்திய துணைக்கண்டத்தில் மொத்தம் 5,58,088 கிராமங்கள் உள்ளனவாம்! 3018 நகரங்களாம்!! அதிக கிராமங்கள் உள்ள இடம் ஐக்கிய மாகாணம். அங்கு 11,000 கிராமங்களாம். பம்பாயில்தான் அதிகபட்சமாக 625 நகரங்கள் உள்ளனவாம்.

*

கிராமப் பஞ்சாயத்துக்களில் இதுவரை நேரடியாகவே தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையிருந்ததை மாற்றி பஞ்சாயத்து போர்டு மெம்பர்கள் மூலம் தலைவர் தேர்தல் நடைபெறலாமென சென்னை சர்க்கார் ஒரு சட்டம் செய்திருக்கிறதல்லவா? இது கூடாது என்று டிச. 3-ல் சென்னையில் நடந்த பஞ்சாயத்துக்கள் மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது! 600-பேர் தீர்மானத்துக்குச் சாதகமாகவும் ஆறே ஆறு பேர் எதிர்த்தும் ஓட்டளித்தார்களாம். நேரடித் தேர்தலே வேண்டும் என்று மாநாட்டில் பலமான கருத்து இருந்ததாம்.

*

ஆண்டவன் வழிபாடு!— ஆண்டவன் வழிபாடு! — என்கிறார்களே, அது என்ன? அரை ரூபாய்க்குப் பதில் ஆறு ரூபாய்க்கு அபிஷேகம் செய்விப்பதா! அல்லது, அடுத்த வீட்டுக்காரன் ஒரு கோயில் கட்டினால் நாம் மூன்று கோயில்கள் கட்டுவதா!! இல்லையென்கிறார், டாக்டர் பிரசாத். "ஆண்டவன் வழிபாடு என்பது என்ன தெரியுமா? மக்களுக்குச் சேவை செய்வதுதான்" என்று பேசியுள்ளார். ஆண்டிகளை நாடிடுவதிலும், ஆலயங்களுக்குப் போவதிலும் அபாரசிரத்தை காட்டும் இந்தியக் குடியரசுத் தலைவரா, இப்படிச் சொன்னார் என்று ஆச்சரியம் பிறக்கக் கூடும். ஆமாம், தோழர்களே, ஆமாம் — டில்லியில் இராமகிருஷ்ண மடத்தைச்சேர்ந்தவர்கள் புதிய கோயில் ஒன்று கட்டி திறப்பு விழாவுக்கு ராசேந்திர பிரசாதை அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அப்போதுதான் மேற்கண்டவாறு சொன்னாராம் அவர், "இந்த நிலையத் துறவிகளின் உயர்ந்த வேதாந்தமோ, ஆன்மீகத் தத்துவமோ என்னைக் கவரவில்லை. அவர்கள் மக்களுக்குச் செய்து வரும் தொண்டுகளை நான் மிகவும் பாராட்டுகிறேன். அவைதான் என்னைக் கவர்ந்துவிட்டன" என்றும் சொல்லியுள்ளார்.

★

# தவறு

161] ஆண்டு சந்தா ரூ. 8 [8-12-57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 21

எந்த இலட்சியத்தை அருமையானதெனக் கருதி இதயத்தில்ஏற்றிக்கொண்டிருக்கிறார்களோ, அதற்காகத்தடைகளைத் தாண்டிடும் ஆர்வமும், சிறைச்சாலைக்கு அஞ்சாக் குணமும் கொண்ட ஆயிரக்கணக்கான வாலிபர்களும் தாய்மார்களும் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள்! சட்டம் அவர்களது உள்ள உறுதியை ஒன்றும் செய்திட இயலாது!!— என்று, சட்டசபையிலே, தி. மு. க. ச்சார்பில் எடுத்தியம்பியபோது, அமைச்சர்கள் பார்வையை மட்டுமே பதிலாகத் தந்தனர்.

அவசரத்துக்கு ஆட்படுகிறீர்கள்! அநாவசியமான நடவடிக்கையில் ஈடுபடுகிறீர்கள்! நிலைமையை, இந்தச் சட்டத்தின் மூலம், மோசமாக்குகிறீர்கள்!— என்று நாம்எடுத்துக்காட்டியபோது, தி மு. க-வினர் தமது பேச்சுத் திறனைக் காட்டுகின்றனர் என்று கருதினர்போலும் அவர்கள். நமக்கிருக்கும் பலத்தைக் கொண்டு, எதையும் செய்யலாம், எவரையும் வீழ்த்தலாம் என்ற தைரியமும் வேறு இருக்கிறதல்லவா அவர்களுக்கு? என்ன சொன்னாலென்ன, சட்டம் வந்துவிட்டால், அணிவகுக்கப்பட்ட எதிர்ப்பெல்லாம் ஓடோடி மறைந்துவிடும் என்கிற உள்ளத் துணிவுடனும் இருந்திருக்கக்கூடும், அப்போது. ஆனால், மாபெரும் தவறு செய்துவிட்டார்கள், மக்கள் மன்றத்தில் அழியாத வடுவைப் பெற்றுக் கொண்டுவிட்டார்கள், என்பதை அண்மையில் நடந்த சம்பவங்கள் காட்டிவிட்டன.

•

சட்டம் நிறைவேற்றப்பட்டது! நாம், எச்சரித்தும்—கேட்காமல், நிறைவேற்றப்பட்டது!! நிறைவேற்றப்பட்ட சட்டம் இருக்கிறது; ஆனால், எதைத் தடுப்பதற்காக இச் சட்டம் வந்ததோ, அந்தச்செயல் நடைபெறாமலில்லை. நாட்டின் பலபாகங்களிலும், ஆயிரக்கணக்கான தோழர்களும் தோழியர்களும், கைக்குழந்தைகள் ஏந்தியபடியும், கவலையில்லா முகத்தோடும், சட்டத்தை மீறியிருக்கிறார்கள். சட்டம் வழங்கிய, ஓராண்டு, ஒன்பது மாதம், ஆறு மாதம், மூன்று மாதம், என்கிற தண்டனைகளையும் ஏற்றுக் கொண்டு, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை எனும் கீதத்தை நினைந்தவராய்ச் சென்றிருக்கிறார்கள், சிறைக் கோட்டம்.

சட்டமறுப்புச் செய்கிறவர்களைச் சமாளிக்க, எம்மிடம் அதிகாரம் இருக்கிறது, என்று அமைச்சர்கள் கூறக்கூடும். ஆனால், ஒரு அரசின் பலம், சட்டத்தை மீறுபவர்களைத் தண்டிப்பதற்கு இருக்கும் தைரியத்தைச் சார்ந்தது அல்ல; சட்டத்தை மீறாத அளவுக்கு சாமர்த்தியமாக ஆட்சியை நடத்துகிறார்கள் என்பதில்தானிருக்கிறது. சிக்கலும் பூசலும் ஏற்படுகின்ற சமயத்தில், தைரியம்மட்டும் இருந்தால் போதாது; விவேகமும் வேண்டும். 'தடி' எடுப்பதென்பது சுலபம்; ஆனால், 'தலை'யையும் 'இதயத்தை'யும் பயன்படுத்துவதுதான், சிக்கலைத் தீர்ப்பதற்கு, அவசியம். ஆத்திரத்தோடு 'விட்டேனா பார்' என்று ஆர்ப்பரிப்பதைவிட, அன்பையும் விவேகத்தையும் காட்டுவதுதான், நல்லது. ஆத்திரப்பாதை செல்வது, சுலபம்; ஆனால், அது சிக்கலை எப்போதும், தீர்க்காது; வளர்க்கும்—வம்புகளை அதிகமாக்கும்.

தேசிய கவுரவத்தைக் காப்பாற்ற, மாநில சர்க்கார், சட்டம் ஒன்று செய்தார்கள். ஆனால், கண்ட காட்சியென்ன நாட்டில்? சட்டம் எழுதப்பட்ட மை உலருவதற்குள்ளேயே, ஆயிரக் கணக்கானவர்கள், அச்சட்டத்தை மீறியிருக்கிறார்கள் !!

அரசில் அமர்ந்திருப்போரின் ஆட்சிக்கு, கீர்த்தியூட்டும் நிகழ்ச்சியா இது? அவசர அவசரமாகச் சட்டம் செய்து, கவுரவத்தைக் காப்பாற்ற முனைந்தார்கள், அடடா, அவர்தம் தைரியமும் யூகமும் யாருக்கு வரும் என்று, உலகம் பாராட்டுரையா வழங்கும், இதைக் கண்டு? ஆரவாரத்தோடு நிறைவேற்றப்பட்ட சட்டம், அதே சமயத்தில் மீறப்பட்டது கண்டு, உலகம் கெக்கலிக்கும்! எத்தனை பேர் மீறினார்கள் தெரியுமா? அத்தனை பேரையும் என்ன செய்தோம் அறிவீரா, என்று அரசு பட்டியல் தருவது, கித்தாப்புக்கு உரிய செயலா? அமைதியை வாழ்வாகக் கொண்ட மக்கள் வாழும் சென்னை மாநிலத்தில், ஆயிரக்கணக்கில் சட்டத்தை மீறிடும் சங்கடமான அரசியல் நிலவுகிறது என்பதையன்றோ எடுத்துக் காட்டுகிறது!

ஆளும் கட்சி, இப்படியொரு சூழ்நிலை எனது ஆட்சியில் இல்லை என்பதைக் காட்டிடும் வகையில், நடப்பதுதான் பெருமை. எனது ஆட்சியில் நான் சட்டம் செய்தேன்—உடனே அதை ஆயிரக்கணக்கானவர்கள் மீறினார்கள்—மீறியவர்களை விட்டேனா? விடுவேனா! — கோர்ட்டில் நிறுத்தினேன்—ஒன்பது மாதம், ஆறு மாதம், மூன்று மாதம் என்றெல்லாம்

தண்டனை வாங்கித் தந்தேன்—என்பது வெட்கப்பட வேண்டிய செயல்; தரக்குறைவான கட்டம், ஒரு அரசுக்கு.

சட்டத்தை மறுப்பதென்பதோ அல்லது அமைதியைக் குலைப்பதென்பதோ, எந்த இடத்திலும், எவராலும் ஏற்றுக்கொள்ளப்படாத செயல்களாகும்.

சட்டத்தை மீறுகிற அளவுக்கு ஒரு அரசியல் கட்சி செல்ல நேருகிறதென்றால், அதற்குக் காரணம் ஆளும் கட்சியேயாகும்! வேடிக்கைக்காகவோ அல்லது விளையாட்டுத்தனமாகவோ, எந்த அரசியல் கட்சியும் ஆயிரக்கணக்கான இளைஞர்களை சட்டத்தை மீறும்படியும், அதனால் வரும சங்கடங்களைத் தாங்கும்படியும், செய்யாது!! இப்படிப்பட்ட செயல்கள் மூலம் அல்ல, அரசியல் இயக்கங்கள் உருவாவதும், வளர்வதும். வேண்டுகோள் அனுப்பிப் பார்த்து, நாகரிகமான வழிகளில் எல்லாம் தங்கள் குறைகளைத் தெரிவித்து, அப்போதும் அந்த வேண்டுகோட்களிலிருக்கும் ஆர்வத்தையும் ஆசையையும் ஆளும் கட்சி மதிக்காதபோதுதான், "நேரடி நடவடிக்கை"யில் ஈடுபட நேருகிறது. (இதுவும், காங்கிரஸ் காட்டிய வழிதான்!) அப்போது, ஐயகோ! சட்டத்தை மீறுகிறார்கள், அமைதியைக் குலைக்கிறார்கள் என்று கூக்குரலிடுவது அர்த்தமற்றது. குறைகொண்டோர், தமது குறைகளுக்குப் பரிகாரம் தேட, வேறு வழிகள் எல்லாம் அடைபட்டுப் போனதால், இந்தக் கட்டத்துக்குத் துரத்தப்படுகிறார்கள்.

திராவிடக் கழகத் தலைவரான பெரியார் அவர்கள், விளையாட்டுத்தனமாக இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியவரல்ல—ஆழ்ந்து சிந்தித்த பின்னரே, இப்படிப்பட்ட கட்டத்துக்கு அவர் வரக் கூடியவர். எல்லாவழிகளிலும், தன்கோரிக்கையினைச் சொல்லிப்பார்த்தும், ஆட்சியிலிருப்போர் கேளாக் காதினராய் இருப்பதைக் கண்டபிறகே, சட்ட மறுப்புக்குத் தன்னவர்களைப் பணித்திருக்கிறார். பெரியார் அவர்களின் 'கோரிக்கை'யும் சாதாரணமானதன்று; ஒதுக்கக் கூடியதுமன்று. இதை நாம் சட்டசபையில், எடுத்துக் காட்டினோம்; இப்போதும் கூறுகிறோம். இருபது ஆண்டுகளுக்கு மேலாக இடைவிடாத பிரச்சார மூலமும், ஓய்வில்லாத சேவையின் மூலமும் நாட்டவருக்கு உணர்த்தப்பட்டு வரும் 'கோரிக்கை'யாகும். இப்போது காங்கிரசிலும், கம்யூனிஸ்டுக் கட்சி போன்ற இயக்கங்களிலும் இருக்கும் பலர் ஒருபோது ஆர்வமும் ஆசையும் காட்டி வளர்த்திட்ட கோரிக்கையாகும். இப்போது அவர்கள் எங்கெங்கோ இருந்தாலும், ஒருசமயம் ஒரே அணியில் நின்று இதனை முழக்கியவர்கள்தான்! அந்தக் கோரிக்கை, சாதிச் சனியன் ஒழிக்கப்பட்டு, சமரசம் முகிழ்க்கும் பாதையில் சமூகம் அமைக்கப்பட வேண்டுமென்பதுதான்.

பண்டிதநேரு அவர்கள், 'ஏனோ தானோ' என்று இருக்கலாம்—ஏசலாம், பேசலாம். ஆனால் வளர்ந்து வரும் இந்த விடுதலைத் தாகத்தைத் தணிப்பதற்கு அவர் கையாளும் அலட்சியமும், அர்த்தமற்ற கண்டனங்களும், பயன்படாது என்பதை அவருக்கு மரியாதையோடு தெரிவித்துக்கொள்ள நாம் கடைமைப் பட்டிருக்கிறோம். நான் சென்ஸ்—காட்டுமிராண்டித்தனம்—முட்டாள்தனம்—சிறுபிள்ளைத்தனம்—என்பன போன்ற சொற்கள், நேரு அவர்களுக்கென்று இருப்பவையாகும். தென்னாட்டில் காணும் நிகழ்ச்சிகளைப்பற்றி, இந்த வார்த்தைகளைக்கொண்டு, வர்ணிப்பதும், அதன் மூலம் தன் கடமை தீர்ந்துவிட்டதென அவர் எண்ணுவதும் நல்லதல்ல. கண்டனச் சொற்களை நம்புவதும், அவைகளை இதுபோன்ற சந்தர்ப்பங்களில் எடுத்து வீசுவதும், அரசியல் மேதாவிலாசத்துக்கு அழகுமல்ல; பொருத்தமுமல்ல. ஒரு வேளை உலகையெல்லாம் தன உள்ளங்கையிலே வைத்திருக்கும் அவருக்கு, இந்தச் சின்ன விஷயங்களில் கவனம் செலுத்த நேரமில்லாதிருக்கக்கூடும்! ஆனால் இங்கே நடப்பது என்ன, இங்கிருப்போர் விரும்புவது யாது என்பதை அவருக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லும் பொறுப்பு, இம்மாநிலத்தை ஆளும் அரசுக்கு இருக்கிறது. ஆனால், நடப்பதை அறிய அவரும ஆவல் கொள்ளுவதில்லை—நாடாளும் 'நம்மவர்களும்' சட்டம் செய்யும் கட்டத்துக்கு ஓடுகிறார்களே ஒழிய, போதிய கவனம் செலுத்துவதில்லை.

சாதி ஒழிப்பு என்பது, சரியப்பா! அதிகப் பிரசங்கத்தாலும், அகப்பட்டதை எரிப்பதாலுமா சாதியை ஒழித்துவிட முடியும்?—என்று சிலர் கேட்கக் கூடும். உண்மைதான்! அப்படிக் கேட்பவர்களைப் பார்த்து நாமும் திருப்பிக் கேட்க விரும்புகிறோம்;—சாதி ஒழியவேண்டுமெனக் கோரும் ஆயிரக் கணக்கான வாலிபர்களை பண்டிதரும் அவரது சர்க்காரும் சிறைகளில் போட்டு அடைத்துவிடுவதால் மட்டும், அவர்கள் இலட்சியம், அணைந்தா போய்விடும்? ஆகாதே! எரிகிற நெருப்பில் எண்ணெயல்லவோ, அடக்குமுறை!!

நிலைமையைப் புரிந்து, கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், ஆள்வோர் நடந்திருக்க வேண்டும். சாதியை ஒழிக்கவேண்டும் என்பதில், தகராறே கிடையாது. அநேகமாக இங்குள்ள முற்போக்குக் கருத்துடையோர் எல்லாம் விரும்புகிற ஒரு காரியம் தான் அது. இதை நிறைவேற்றும வகையில், அரசு ஈடுபட்டிருக்கலாம். அப்போது இதுபோன்ற சிக்கல்கள் எழவும், நேர்ந்திருக்காது. மாற்றுக் கட்சியினர் சொல்வதென்ன என்பதை மனம் கொடுத்துக் கேட்கும் குணமும், உதார சிந்தையும், பெருந்தனமையும், ஒத்துப்போகும் சுபாவமும், இருந்தால், நாட்டில் இப்படியொரு கட்டம் ஏற்படாது. பண்டித நேரு அவர்கள் இந்த நற்குணங்கள் யாவையும், 'வெளிநாடுகளுக்குப் போதிக்க' வைத்திருக்கிறாரே ஒழிய, உள் நாட்டில் பயன்படுத்துவது கிடையாது. அவரும் சரி, அவருடைய சீடர்களும் சரி, இதுபோன்ற சமயங்களில் ஆத்திரமடைகிறார்கள்! மாற்றாரின் மனக்குறைகளைக் கண்டறிவதில் கவனம் செலுத்துவதில்லை; கண்டிப்பதிலும் தண்டிப்பதிலுமே ஆர்வம் காட்டுகிறார்கள்!!

பலத்த மெஜாரிடி இருக்கிறது, நம்மைத் தட்டிக் கேட்க யாரிருக்கிறார்கள் எனும் தைரியத்தில், எதற்கும் காது கொடுப்பதில்லை காங்கிரஸ். எதிர்க் கட்சிகள் என்றாலே அலட்சியம் காட்டுகின்றனர்.

(14-ம் பக்கம் பார்க்க)

# நூறாண்டுகளுக்குப் பிறகு...!

**தொலைபேசியின்** மணி ஒலித்தது. மாலை தொடுத்துக் கொண்டிருந்தாள் மென்மை. மணி ஒலி கேட்டதும் மல்லிகை மொட்டுகளை அப்படியே போட்டுவிட்டு எழுந்துபோய் "யார் அங்கே? இங்கே அழகர் வீடு. பேசுவது அவர் மகள் மென்மை" என்று சொல்லி ஒலி வாங்கியைத் தாங்கி நின்றாள். "மென்மை, நான்தான் பேசுகிறேன், என்ன செய்து கொண்டிருக்கின்றாய்!" "மாலை தான் தொடுக்கிறேன், மாலை எங்காவது போகலாமா?" என்று மென்மை கேட்டாள். "அதைத் தான் நானும் கேட்கலாம் என எண்ணினேன். ஏன் மென்மை, சந்திரனுக்குப் போய்வரலாமா? இரண்டு நாட்களில் வந்துவிடலாம்—ஊம்...... என்ன சொல்கிறாய்?"

"எனக்கென்ன அத்தான் இதில் தடை. அம்மாவைக் கேட்டுச் சொல்கிறேன், இரு" என்று சொல்லிவிட்டு துள்ளி ஓடினாள் மாடிக்கு.

"என்னடி மகளே எக்காள நடை போடுகிறாய்" என்று மென்மையின் தாய் முதுமை அவளை வரவேற்றாள்.

"அம்மா, ஆற்றல் இப்போது பேசினார் அம்மா. சந்திரனுக்குப் போகிறாராம். என்னையும் வரச் சொல்கிறார். போகட்டுமா அம்மா நானும்"

"போய்வாயேன். சரி 'வருகிறேன்' என்று ஆற்றலுக்குச் சொல்லிவிடு, போ" என்று முதுமை விடைகொடுத்தாள்.

ஆற்றலும் மென்மையும் காதலர்கள். திருமணத்திற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அதற்கு இடையில் சந்திரனுக்குப் போய்வரலாம் என்று நினைத்தான் ஆற்றல். மென்மையின் பூப்போன்ற விரல்களை முறித்து விடுபவன்போல் பற்றி இழுத்துக்கொண்டு சந்திரனின் தெருக்களில்—ஊர்களில் — நகரங்களில் சுற்றினான். அலுத்தபோது அருகே இருந்த 'உணவு ஓய்வு விடுதி'களில் தங்கி இளைப்பாறினர். அந்த விடுதிகளில் உள்ள அறைகள் மாளிகைகள் போல் இருந்தன. இரண்டு நாட்கள் எப்படிப் போயின என்றே அவனுக்கும் தெரியவில்லை. அவளுக்கும் புரியவில்லை.

மா. க. தசரதன்

"என்ன ஆற்றல், இதற்குள்ளாகவா வீட்டிற்குப் போவது! இந்தக் கடற்கரையில்தான் சற்று நேரம் இருந்துவிட்டுப் போகலாமே" என்றாள் அவள்.

"நீ சொல்லி எதை நான் வேண்டாம் என்றேன்; என்னை விட்டால் தானே நீ" என்றான் ஆற்றல்.

"ஆமாம், நான்தான் விடாமல் தொலைபேசியைத் தொட்டுத் தொட்டுப் பேசிக்கொண்டிருக்கிறேன்"

"பின்னே என்னவாம். நான் எப்போது பேசுவேன் என்று தொலைபேசிக்கு அருகிலேயே காத்துக்கிடக்கிறாயே, எனக்கா தெரியாது உன் மனம்" என்று சொல்லிய வண்ணம் ஆற்றல் அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

"ஆ! ஐயோ! வலி வலி, விடு, ஆற்றல், விடு" என்று சொல்லிய வண்ணம் அவன்கையைத் தள்ளினாள். அவன் கன்னத்தைவிட்டு கையைப்பற்றினான்.

"சரிதான். அதைக் கிள்ளிவிட்டு இதை முறிக்கின்றாயா?" என்று சிணுங்கினாள்.

"முறிந்தால் என்ன? என்னமோ பழைய பாட்டிபோல் பேசுகின்றாயே. இந்தக்கைபோனால் என்ன! 'உறுப்பு பாங்கி'ல் வேறு கை வாங்கிக்கொண்டால் போகிறது" என்றான் அவன்.

"சரிதான். வேறு வேலையே இல்லையா? இதுவரையில் உன்னால் இந்த விரல்களை மட்டும்தான் புதிது புதிதாக பூட்டிக்கொண்டேன. நீ இப்போது கையையே 'ஒரு கை' பார்க்கிறேன் என்கிறாய். பொல்லாத ஆற்றல் நீ" என்றாள் அவள்.

"நீ என்னவோ விரல்களை மாற்றிக் கொண்டதைப்பற்றி இவ்வளவு பேசுகிறாயே, உனக்காக நான் என் பருமனையே அல்லவா குறைத்துக்கொண்டேன்"

"நான் மட்டும் என்ன. 'இவ்வளவு உயரம்' ஏன் மென்மை. 'நீ கொஞ்சம் குறைத்துக்கொள்' என்று என்னிடம் கெஞ்சி என் உயரத்தைக் குறைத்துக்கொள்ளச் சொன்னாயே, அதன்படி நடக்கவில்லையா?

"ஆமாம், நீ மிகவும் நல்லவள் தான் போ. நான்தான் கெட்டவன்; இருக்கட்டுமே அப்படித் தான். அதிலே எனக்குத்தானே பெருமை. என் மனைவி நல்லவள் என்று நான் சொல்வேன். ஆனால் நீ, என் கணவன் கெட்டவன்

என்றுதானே சொல்ல வேண்டும்!'' என்றான் ஆற்றல்.

மென்மையின் மனதில் சினம் எழுந்துவிட்டது. 'உம்' என்று முகத்தைத் 'தூக்கி' வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள். சற்று நேரம் ஆற்றலும் அப்படியே கோபம் கொண்டவனைப்போல் கொதிப்போடு இருந்தான்.

திடீரென என்னவோ நினைவுக்கு வந்ததைப்போல் தன் காற்சட்டைப்பைகளைத் துழாவினான். ஒரு சிறிய அட்டைப் பெட்டியை எடுத்தான். அதிலிருந்து ஒரு மாத்திரையை எடுத்து விழுங்கினான். மறுகணம் கொழுந்துவிட்டுக்கொண்டிருந்த கோபம் பறந்து போயிற்று.

கலகலவென நகைத்துக் கொண்டே இன்னொரு மாத்திரையை எடுத்து மென்மையின் வாயில் திணித்தான். அவளும் அதனை 'மென்று விழுங்கினாள்.' மறுகணம் அங்கே சிரிப்பொலி கடலொலிக்குப் போட்டியாக எழுந்தது.

சற்று நேரம் எதை எதையோ பேசிக்கொண்டிருந்தனர். பேச்சு எங்கெங்கோபோய் இறுதியில் திருமணத்தைப்பற்றியே வந்து சேர்ந்தது.

"ஆமாம். மென்மை உனக்குப் பிறக்கும் முதல் குழந்தை ஆணாக இருக்கவேண்டுமா? இல்லை உன் இனமாக இருக்கவேண்டுமா?'' என்று கேட்டான் ஆற்றல்.

"ஐய்ய......' என்று சொல்லி விட்டு ஒரு சின்னப் புன்னகையை வழியவிட்டு அவள் நாணினாள்.

"ஊம்...எனக்கா தெரியாது, நீ பெண்ணாகத்தான் இருக்க வேண்டும் என விரும்புகின்றாய்''

"ஆமாம், நீ மட்டும் என்ன, ஆணாக இருக்கவேண்டும் எனச் சற்று முன் விரும்பவில்லையா?''

ஒரு கணம் மறுபடியும் அங்கே அமைதி நிலவியது.

"சரி அப்படியே செய்துவிடுவோம்'' என்றான் ஆற்றல்.

'எப்படி' என்று கேட்பதுபோல் பார்த்தாள் மென்மை.

"அதுதான் இப்போது நினைத்துக்கொண்டிருந்தாயே நீ, முதல் பிறப்பு இரட்டைக்குழந்தைகளாக இருக்கட்டும், அதில் ஒன்று ஆண், மற்றது பெண் என்று இருக்கட்டும் என்று. 'அப்படியே செய்வோம். நம் குடும்ப மருத்துவரிடம் சொன்னால் செய்துவிடுகின்றார்; இதிலே என்ன இருக்கிறது சிரமம்'' என்றான் ஆற்றல்.

மேலும்அவன் என்னவோ பேச எண்ணினான். ஆனால் மென்மை அவனைப் பேசவிடவில்லை.

"அத்தான்! நேரமாகிறது. எழு போகலாம். இன்று காலையிலிருந்து மேகம் சூழ்ந்துகொண்டு பூமியில் இருளாகவே இருந்தது, சமைக்க இயலாமல் அம்மா என்ன பாடுபட்டார்களோ, வா, போகலாம்'' என்று எழுந்தாள்.

'ஆமாம் எனக்குத்தான் உன்னோடு இருக்கும்போது நேரம் போவதே தெரியவில்லை. வேலையும் மறந்துவிடுகின்றது. நான் இந்த வாரம் முழுவதும் தொழில் நிலையத்திற்குப் போகவே இல்லையே, இந்த வாரம் எனக்கு வேலை மிகுதி. எட்டு மணி நேரம் —அதுவும் ஒருவாரத்தில் எட்டு மணி நேரம் பாரேன், இன்று இரவு நான்கு மணி நேரம், நாளைப் பகல் நான்கு மணி நேரம் செய்து விட்டால் கணக்கு நேராகிவிடும்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து 'வா' என்று அழைத்தான்.

"ஆற்றல்''

"என்ன மென்மை?''

"இப்படி என்னோடு வாயேன்'' என்று சொல்லிய வண்ணம் அலைகளை நோக்கிப் போனாள்.

அவளைத் தாங்கியவாறு அலைகளில் நின்றுகொண்டிருந்த ஆற்றல் "உனக்கு இன்னமும் இந்த அலைகளிடம் உள்ள அச்சம்போகவில்லையே'' என்று நகைத்தான்.

அவனுடைய நகைப்பைப் பொருட்படுத்தாமல் அவள் இரண்டு கைகளையும் இணைத்து நீரை மொண்டு மொண்டு குடித்தாள்.

என் கண்களில் ஒரு மின்னல் வெட்டு, உற்றுப்பார்த்தேன். ஒருகணம்மயக்கம், பிறகு தெளிவு. அவளை அணைத்து நின்ற ஆற்றல் நானாகவே இருப்பதனை உணர்ந்தேன். ஆற்றல் நானான பிறகு என் மென்மை அந்தக் கடல் நீரைக் குடிப்பது எனக்குக் குமட்டல் எடுத்தது. இந்த உப்பு நீரை எடுத்து உவகை பொங்க அள்ளிப் பருகுகின்றாளே என எண்ணி,

"மென்மை......மென்மை இதென்ன உப்பு நீரைக் குடிக்கலாமா விடுவிடு'' என்று தடுத்தேன், ஆனால் அவளோ, "என்னைப்பழையபாட்டிஎன்றாய்கொஞ்ச நேரத்திற்கு முன். இப்போது நீ கடல் நீர் உப்பு என்று பழைய பாட்டன்போல் பேசுகிறாயே'' என வாய்விட்டுச் சிரித்துக்கொண்டே வேகமாக நடந்தாள்.

"இரு மென்மை. இதோ வருகின்றேன்''......என்று சொல்லிய வண்ணம் அவள் கையைப்பற்றிய வண்ணம் நானும் ஓடினேன்.

ஆனால் அந்த மென்மையின் ஓட்டத்தை என்னால் பின்பற்ற இயலவில்லை. சர்க்கரை தண்ணீரில் கரைந்து போவதைப்போல என் கையிலிருந்த அவள் காற்றில் கரைந்து கலந்தாள்.

'என்ன ஏமாற்றம்' என்று திடுக்கிட்டு நோக்கினேன். கி. பி. 2057-ல் என்ற தலைப்பில் பத்திரிகையில் வந்த செய்தியைக் கத்தரித்து வைத்திருந்த காகிதத் துண்டுதான் என் கையில் இருந்தது.

அமெரிக்காவில் விஞ்ஞானத் துறையில் தேர்ந்தபுலமைகொண்ட எண்மரைக்கூட்டி "நூறு ஆண்டுகள் முன்னோக்கிப்பார்க்கச் சொல்லினராம் அமெரிக்க அரசினர். அவர்களில் உலகமே கண்டு வியந்த, இல்லை, இல்லை பயந்த வி 1, வி 2, ஆகிய ராக்கட்டுகளைச் செய்த விஞ்ஞானியும் இடம் பெற்றிருக்கின்றார். அந்த விஞ்ஞான வித்தகரின் குழுதான் இன்னும் நூறு ஆண்டுகளில் என்னென்ன நடக்கும் என்பதனை ஒரு பெரிய பட்டியலாகத் தந்திருக்கின்றது.

சந்திரனில் இருக்கும் பெரிய பெரிய உணவு விடுதிகளில் விடுமுறையைக் கழித்து மீள இயலும்.

(10-ம் பக்கம் பார்க்க)

முகவரி மாற்றம் :

**மூவலூர் ஆ. இராமாமிர்தம்மாள்,**
**C/o S. செல்லப்பா,**
சொஸைட்டி ஜங்ஷன் காலனி,
இரயிலடி, மாயவரம்.

# எழும்பு

—[மலர்மன்னன்]—

__உறுப்பினர்கள் :__

**மாவீரன் அலெக்சாந்தர்** — உலக வரலாற்றில் தனக்கென்று ஒரு தனியிடத்தைப் பெற்ற கிரேக்கப் பெரு வேந்தன்.

**மேதை டயோனிஸ்** — மாமன்னன் அலெக்சாந்தரிடம் செல்வாக்குப் பெற்றுள்ள ஓர் பேரறிஞர்.

**ஒலோரஸ்** — பேரறிஞன் டயோனிஸின் மாணுக்கன்.

**தெரோப்ஸ்** —பணியாளன்.

*

[பேரறிஞர் டயோனிஸ் ஏதோ சிந்தனையிலாழ்ந்து காணப்படுகிறுர். ஒலோரஸ் மெல்ல அவரருகில் வந்து நிற்கிருன். தான் வந்து நிற்பதை அவர் சற்றும் உணராதமையால் மெல்லத் தொண்டையைக் கனைத்துக்கொள்ளுகிருன். கற்சிலையாக அமர்ந்திருந்த டயோனிஸின் மேனியில் சிறு சலனம் பிறக்கிறது. திரும்பிப் பார்க்கிருர்.]

டயோனிஸ்:- யார், நீயா, ஒலோரஸ்!

ஒலோரஸ்:- ஆமாம், ஐயா; ஒலோரஸ்தான்.

டயோ : பூனையைப்போல் சந்தடியின்றி வந்து நிற்கிருயே, ஒலோரஸ்; எதற்காக?

ஒலோ : தாங்கள் இப்படி ஒரேயடியாகச் சிந்தனையிலாழ்ந்து போவதற்குக் காரணமாயிருந்தது எது என்பதை நான் அறிந்துகொள்ளலாமா, ஐயா?

டயோ : எல்லாம் நம் அலெக்சாந்தரைப் பற்றிய கவலைதான், ஒலோரஸ்.

ஒலோ : கவலையா? நீங்கள் கவலைப்படும் அளவிற்கு வேந்தருக்கு அப்படியென்ன அவல நிலை வந்துவிட்டது?

டயோ : நம் வேந்தன் 'கத்தியே சகல சக்தியும்' என்றெண்ணிக் கொண்டிருக்கிருன், ஒலோரஸ். அதுதான் கவலைக்குக்காரணம்.

> டயோனிஸ் என்பார் கிரேக்கப் பேரறிஞருள் ஒருவரும், அலெக்சாந்தரின் ஞானசிரியருள் ஒருவருமாவார். அலெக்சாந்தரின் ஆதிபத்திய வெறியினைக் குறைப்பதற்கும், ஆண்டான் - அடிமை இவர்களுக்கிடையே எவ்வித வேற்றுமையுமில்லை என்பதை அவன் உணரும்பொருட்டும் நல்லதொரு முறையை அவர் கையாண்டார். அந்த நிகழ்ச்சியே இங்கு சின்னஞ் சிறு நாடக வடிவம் பெற்றுக் காட்சியளிக்கின்றது.

ஒலோ : ஆசானே, அதிலென்ன தவறு? அலெக்சாந்தரின் வாளுக்கு அகிலமே சிரந் தாழ்த்துகிறது. சென்றவிடங்களிலெல்லாம் அவருக்கு வெற்றியின் அணைப்புக் கிடைக்கிறது; உறையிலே கிடந்த வாளை உருவியவாறு உலகை வலம் வந்ததாலல்லவோ, நம் அரசருக்கு இத்தனை புகழ் வந்து சேர்ந்தது!

டயோ : உண்மைதான், ஒலோரஸ். ஆனுலும் அதற்காக வாளையே முதன்மையாகக் கருதிக்கொண்டு விடுவது விவேகமாகாது. என் அன்பிற்குரிய மாணவனே, ஒலோரஸ், 'உலக நாடுகள் அனைத்தையும் வென்று தன் காலடிக்கீழ் வைத்திருத்தல் வேண்டும்' என்ற பேராசை விரும்பத்தக்கதல்ல, அப்பா!

ஒலோ:- அரசனுக்கு இலக்கணம் அதுதானே ஐயா...

டயோ:- அல்ல ஒலோரஸ், அல்ல' குடிமக்களின் தேவைகள் என்னென்ன என்பதை உணர்ந்து அவற்றைப் பூர்த்திசெய்வதும், அடிமைப்படுத்தவரும் அயலாரிடமிருந்து அவர்களையும், அவர்களது உடைமைகளையும் பாதுகாப்பதும்தான் அரசனுக்கு இலக்கணமேயன்றி அண்டை நாடுகள்மீது படையெடுப்பதும், அவற்றைப் பணியவைப்பதும் அல்ல!

ஒலோ:- அயல் நாடுகளை வெல்வதுதானே அரசர்களுக்குப் பொழுதுபோக்காக இருக்க முடியும்?

டயோ:- தவறு, ஒலோரஸ். காவலருக்குப் பொழுதுபோக்கு, கலைகளை வளர்த்தல். நீ கூறுவதுபோல் பிற நாடுகளை வெல்லுவதல்ல: எண்ணற்ற உயிர்களைப் பலிகொடுத்து மாற்ருரை அடிமைப்படுத்துவது மன்னர்களுக்குப் பொழுதுபோக்காக இருக்கலாகாது. உலக முழுமைக்கும் தானெருவனே ஆண்டானுக இருக்கவேண்டும் என்ற பேராசை மன்னர்களுக்கு இருக்கக்கூடாது; ஒலோரஸ். போராட்டம் என்பது பாதுகாத்துக் கொள்வதற்குத்தானேயல்லாமல் பொழுதுபோக்குக்கு அல்ல.

ஒலோ:- அப்படியாயின் தாங்கள் கூறவருவது......

டயோ:- நம் வேந்தன், தான் ஆண்டானுயிருக்க, மற்ற அரசு

கள் யாவும் அடிமைகளாயிருக்க வேண்டும் எனப் பெரிதும் விரும்புகிருன். விபரீத ஆசை இது, ஒலோரஸ். அவனை இப்படியே விட்டுவைத்தால் விரைவில் அவனுக்கு இரத்த வெறி பிடித்துவிடும். ஏகாதிபத்திய வெறி மிகமிகத் தீதானது ஒலோரஸ்; அது முதலுக்கே மோசம் விளைவிக்கும் வாணிபமாகும்.

ஒலோ:- அதற்கு நாம் என்ன செய்ய முடியும், ஐயா?

டயோ:- எப்படியாவது அடிமைப் படுத்துவதில் அரசனுக்கிருக்கும் ஆவலைக் குறைக்க வேண்டும். உலகில் மக்களாய் பிறந்த அனைவருமே சரிசமமானவர்கள்; ஆண்டானுக்கும் அடிமைக்குமிடையில் எவ்வித வேற்றுமையுமில்லை என்ற மெய்ப்பொருளை எப்படியாவது அவன் நெஞ்சில் குடியேற்ற வேண்டும், ஒரோலஸ். எல்லாவற்றுக்கும் மேலாக அவன் அடிமைகளை நடத்தும் முறை மாறியாக வேண்டும். அடிமைகளாயிருப்பவர்களும் மனிதர்கள்தான் என்ற எண்ணம் என்றென்றும் அவன் நினைவில் இருந்துகொண்டிருக்க வேண்டும். இந்த மனப்பான்மையைத்தான் நாம் முதலில் அவனுக்கு ஏற்படுத்தியாகவேண்டும.

(ஒலோரஸ் விடையேதும் பகராமல் மௌனமாக நிற்கிருன். சற்று நேரம் தன் அறிவொளி வீசும் அகன்ற விழிகளை எங்கோ செலுத்திய படி இருந்த மேதை டயோனிஸ், ஏதோ ஓர் முடிவிற்கு வந்தவர்போல் சட்டென அவன் பக்கம் திரும்புகிருர்.)

டயோ:- நல்லது, ஒலோரஸ். உன்னோடு கருத்தைப் பறிமாறிக் கொண்டதால் நல்லதொரு வழி எனக்குப் புலப்பட்டது. ஆண்டான் அடிமை என்ற பேதத்தைத் தொலைப்பதற்குச் சரியான முறையொன்று எனக்குத தெரிந்துவிட்டது. (வாயிற்புறம் நோக்கி) தெரோப்ஸ், தெரோப்ஸ்!—ஒலோரஸ், வாயிலில் தெரோப்ஸ் இருந்தால் வரச் சொல்கிருயா?

(தொரோப்ஸ் உள்ளே விரைந்து வருகிருன்.)

தெரோப்ஸ்:- (பணிவுடன்) இதோ நானே வந்துவிட்டேன் ஐயா.

டயோ:- நல்லது தெரோப்ஸ். ஊரெல்லையில் இருக்கும் இடுகாட்டை நீ அறிவாயல்லவா?

ஒலோ:- (வியப்புடன்) என்ன ஐயா, 'ஆண்டான், அடிமை' என்றல்லவா உரையாடிக் கொண்டிருந்தோம்; நடுவே இடுகாடு எங்கிருந்து வந்தது திடீரென்று?

டயோ:- (புன்சிரிப்புடன்) ஆண்டானுக்கும் அடிமைக்கும் இடையே எவ்வித வேற்றுமையுமில்லை என்பதை மயானபூமியால்தான் நன்குணர்த்த முடியும் ஒலோரஸ்; உனக்கு இப்போது எதுவும் விளங்காதுதான்; தெரோப்ஸ், நீ இடுகாட்டிற்குப்போய் அங்கு இறைந்து கிடக்கும் எலும்புத் துண்டுகளையெல்லாம் பொறுக்கிக் கொண்டு வா.

(தெரோப்ஸ் விழிக்கிருன்)

டயோ:- விழித்துக்கொண்டு நிற்பதிலேயே நேரத்தை வீணடிக்காதே தெரோப்ஸ். போ, போய் சொன்ன அலுவலைச் செய்.

(தெரோப்ஸ் செல்கிருன். திகைத்து நிற்கும் ஒலோரஸைக் கண்டு புன்னகை புரிகிருர் மேதைடயோனிஸ்)

* * *

[ மாமன்னன் அலெக்சாந்தரின் விசாலமான அறை. ஓவியம் தீட்டப்பெற்ற வண்ணச் சுவர்களும், பளபளக்கும் பளிங்குத் தரையுமாய் விளங்கும் எழிற் கூடம். அறையில் அறிஞர் டயோனிஸ் மட்டுமே காட்சியளிக்கிருர். அவரும், தனக்கெதிரில் உள்ள மேசையின்மீது எதையோ பிரித்துவைத்துக் கொண்டு அதிலிருந்து ஏதோ பொருட்களை எடுப்பதும் உற்றுப் பார்ப்பதும் திரும்பவைப்பதுமாக இருக்கிருர். அவ்வமயம் மலர்ந்த முகமும் மிடுக்கு நடையுமாக மன்னர் மன்னன் உள்ளே நுழைகிருன். ]

அலெக்சாந்தர்:- (அவரை அணுகியவாறு) அறிஞரே, என்ன ஆய்வில் மூழ்கியிருக்கிறீர்கள்?

டயோனிஸ்: ஒன்றுமில்லை, மன்னவா. (மீண்டும் அதே அலுவலில் ஈடுபடுகிருர்.)

அலெக்: அறிஞர் பெருமானே, துணியில் எதையோ பரப்பி வைத்திருக்கிறீர்களே, என்ன அது?

டயோ: (சர்வ சாதாரணமாக) எலும்புத் துண்டுகள் வேந்தனே......

அலெக்: (அருவருப்புடன்) எலும்புத் துண்டங்களா? இவற்றை ஏன் எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்கள்? ஐயனே, அதிலே என்ன தேடுகிறீர்கள்...? ஒவ்வொன்றையும் எடுப்பதும், திருப்பித் திருப்பி உற்று நோக்குவதும், கீழே வைப்பதுமாக... ஆசானே தங்களது விசித்திரப் போக்கு வியப்பைத் தருகிறது. புழுதி படிந்த இந்த எலும்புத் துண்டுகளில் என்ன ஆய்வு நடத்துகின்றீர்கள்?

டயோ: புழுதியிலே புரளும் எலும்புத் துண்டுகள்தான், அலெக்சாந்தர். அரசர்க்கரசனாய் கிரேக்கத்தை ஆண்ட உன் தந்தையின் எலும்புகளும், அவர் அடிபணியச் செய்திருந்த அடிமைகளின் எலும்புகளும்தான் இங்கே நீ காணபவை.


# திராவிடர் நாட் குறிப்பு 1958

## தி. மு. கழக முழு விவரம் அடங்கிய ஒப்பற்ற டயரி

இதில் அண்ணாவின் 365 பொன் மொழிகள், தலைமை கழக செயற்குழு பொதுக் குழு உறுப்பினர் விவரம், 1,500 கிளைகளின் விவரம் பேச்சாளர் முகவரி, தபால் தந்தி ஆவணப் பதிவு, வருமான வரி விவரம் அடங்கியது.

விலை ரூ. 1-12 கழிவு 20% செலவு தனி ஒரு டயரி வேண்டுவோர் ரூ. 1-75 அனுப்புக.

## தி. மு. க. காலண்டர்

15 தி. மு. க. தலைவர்களின் படங்கள் உள்ள 15X20 அளவில் மூவர்ண படம் 1-க்கு 6 அணா மேற்படி காலண்டர் 1-க்கு அணா 8. கழிவு 25%

50 வகை பொங்கல் வாழ்த்துக்கள் உள்ளன. மாதிரி செட் 1-க்கு ரூ. 3-50 அனுப்புக.

போர்வாள் - 128. பிராட்வே, சென்னை 1.

அலெக்: (லேசாகச் சிரித்தபடி) இவற்றை வைத்துக்கொண்டு என்ன செய்கிறீர்கள்?

டயோ: அலெக்சாந்தர், இந்நாளில் எத்தனையோ பேர், தானொருவனே ஆளவேண்டும்; பிறரெல்லாம் தனக்கு அடிமையாக இருத்தல் வேண்டும் என்று பேராசை கொண்டலைகிறார்களல்லவா? எனக்கு நெடு நாட்களாகவே, ஆண்டானுக்கும் அடிமைக்குமிடையே இருக்கும் வேற்றுமையைத் தெரிந்துகொள்ள ஆவல். உன் தந்தையாரின் எலும்புக்களுக்கும் அவரது அடிமைகளின் எலும்புகளுக்குமிடையே என்ன வேறுபாடு காணப்படுகிறது என்று அப்போது பிடித்துத் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறேன. ஒரு சிறு வேறுபாடும் இதுவரையில் தெரியக் காணோம்! யாவுமே புழுதி படிந்து, அழுக்கேறி, செல்லரித்துத்தான் இருக்கின்றன!

(அலெக்சாந்தரின் வீரம் தவழும் வதனத்தில் வெட்கத்தின் நிழல் படிகிறது.)

அலெக்: ஆசானே, தங்களது இச்செய்கையின் நோக்கம் புரிந்தது. தங்கள கருத்தைத் தெரிந்துகொண்டேன். எனக்கு, ஆண்டானுக்கும், அடிமைக்கும் இடையில் துரும்பன்ன வேறுபாடுமில்லையென்பதை உணர்த்தத் தாங்கள் கையாண்ட முறையையும் அறிந்துகொண்டேன். மேலேதயே, இரத்தவெறியும், ஆதிக்க ஆசையும் கலந்த விலங்குப் பார்வையை இனி உலக நாடுகளின்மீது செலுத்த மாட்டேன். கிரேக்கத்தின் புகழ் பாரெங்கும் பரவுவதற்கான திக்விஜயங்களே இனி என்னல் மேற்கொள்ளப்படும். போர்க்களத்தில் தோல்வியுறுவோரிடமும் பெருந்தன்மையோடு நடந்துகொள்வேன். "அடிமைகள்" என அவர்களை இழிவாக நடத்தும் அகம்பாவக்காரனுயிருக்கமாட்டேன். அறிவுரையால் நன்னெறி காட்டும் ஆசானே, இது உறுதி!

(டயோனிஸின் பரிவுப் பார்வையும், அலெக்சாந்தரின் பணிவன்பான நோக்கும் ஒன்றையொன்று தழுவிக்கொள்ளுகின்றன.)

★



# சாவடி

"ஒற்றன்"

"பெரியய்யா! எங்கே உங்களைப் பார்க்கவே முடியவில்லையே..."

"உடம்பு சரியில்லை, மணிமுடி."

"ஏன்! ஒரு டாக்டரிடம் போய் காட்டுவதுதானே..."

"காட்டலாம்! ஆனல் அந்த டாக்டருக்குக் கொடுக்கப் பணம் வேண்டாமா?"

"உண்மைதான்! இப்படி உங்களைப் போலப் பணம் இல்லாது கஷ்டப்படும் ஏராளமானவர்களின் குறையைப்போக்கும் ஒரு யோசனையைச் சர்க்காருக்குக் கூறியுள்ளார், டாக்டர் சந்தோஷம் என்பவர்."

"என்ன யோசனை, மணிமுடி?"

"கோயமுத்தூரில் அண்மையில் சென்னை மாகாண டாக்டர்கள் மாநாடு நடந்தது. அதற்குத் தலைமைவகித்தபோதுதான், டாக்டர் சந்தோஷம் இந்த யோசனையை வெளியிட்டுள்ளார். அதாவது, டாக்டர்கள் எல்லாம் வியாதியடைந்தவர்களிடம் பணம்வாங்கக்கூடாது, நமது நாட்டில் பெரும்பாலானவர்கள் ஏழைகளாயிருப்பதால் அவர்களால் நல்ல மருத்துவவசதி கிடைக்கமுடியவில்லை. ஆகவே, வியாதியானவர்களுக்கு வைத்தியம செய்துவிட்டு, அதற்கான 'பில்லை' நேரே சர்க்காருக்கு அனுப்பும் முறை வரவேண்டும்..."

"என்ன?"

"ஆமாம், பெரியய்யா! ஒரு டாக்டர் என்ருல் அவர் பொதுச் சொத்தாக இருக்கவேண்டும். அவர் வைத்திருக்கும் ஆசுபத்திரி, கார், மருந்துப் பொருள்கள் யாவும் சர்க்காருக்குச் சொந்தமானதாயிருக்கவேண்டும் - என்று சொல்லியிருக்கிருர்..."

"யோசனை நன்ருயிருக்கிறதே! செய்யுமா, சர்க்கார்?"

**"ஏன் செய்யக்கூடாது? பசியாலும் பட்டினியாலும் யாரும் செத்துவிடக்கூடாது என்பதில் எப்படி ஒரு சர்க்கார் சிரத்தை கொள்கிறதோ, அதுபோல நோயாலும் எவரும் மரணமடைதல் கூடார்து, என்று கவனிக்கவேண்டியது சர்க்காரின் பொறுப்புதானே, என்கிருர் சந்தோஷம்"**

"அது சரி, மணிமுடி! நம்ம சர்க்கார்தான் அல்லாடுகிறதாமே — டில்லி உணவு மந்திரி ஜெயின் சொல்லிவிட்டாராமே, 20 லட்சம் டன் அரிசி தேவைப்படுகிறது. இதை வெளி நாடுகளிலிருந்துதான் வரவழைக்க வேண்டும். அப்படி வரவழைக்க வேண்டுமானல், பணம் வேண்டும். பணமோ, கைவசம் இல்லை. என்ன செய்வது?—என்று பிரலாபித்திருப்பதாகப் பத்திரிக்கையில் வந்தது. பார்த்தாயோ மணிமுடி?"

"பார்த்தேன், பெரியய்யா! அதனல், அரிசி சாப்பிடுவோரெல்லாம் கோதுமை உணவுக்குத் தங்களைப் பதப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், டில்லியிலிருந்து யோசனை சொல்லி வருகிருர்கள்."

"ஆமாம், மணிமுடி! உணவு விஷயத்தில், இப்படி திடீர் திடீரென்று புதுப் புது அபாய அறிவிப்புகள் விடுக்கிருர்களே, நிரந்தரமான கொள்கையும் திட்டமும் கிடையாதோ, டில்லி சர்க்காருக்கு?"

"ஏது, பெரியய்யா! போட்ட ஐந்தாண்டுத் திட்டம்தான், அந்தரத்திலாடுகிறதே. உங்களுக்குத்

தெரியுமோ, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு இன்னும் 4,800 கோடி ரூபாய் தேவையாயிருக்கிறது, என்று சொல்லுகிறார்களல்லவா? அந்த 4,800-கோடியை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்பதால்தான், வெளிநாட்டிலிருந்து அரிசி வரவழைக்க அஞ்சுகிறார்கள்! பணமில்லை என்கிறார்கள்!!''

"எப்போதோ வரப்போகும் சுபீட்சத்துக்காக இப்போதிருக்கும் நாம், பட்டினி கிடந்து சாக வேண்டும் என்றால் அதென்ன ஐந்தாண்டுத் திட்டம் தம்பி?''

"இந்த வேடிக்கையான ஐந்தாண்டுத் திட்டம்பற்றி முன்பு இங்கே கவர்னராயிருந்தாரே பிரகாசா, அவர் நவ. 27-ந் தேதி சென்னையில் பேசும்போது சொல்லுகிறார்......''

"சென்னைக்கு வந்திருந்தாரா, அவர்?''

"ஆமாம்! பெண்கள் இந்திய சங்கத்தில் பேசும்போது தெரிவிக்கிறார் :—

'ஐந்தாண்டுத் திட்டம்' என்ற மகுடத்துடன் என் மேசைமீது பல கனமான புஸ்தகங்கள் இருக்கின்றன. அப்புத்தகங்களின் அளவைப் பார்த்ததுமே நான் திகைத்துவிடுகிறேன்; புரட்டிப் பார்க்கத் துணிச்சல் ஏற்படுவதில்லை. திட்டம் பற்றி யாராவது பிரசங்கம் செய்யும்பொழுது எல்லாம் தெரிந்ததுபோல் நடித்துவிடுகிறேன். ஆனால், ரகசியமாகச் சொல்கிறேன்—இதை வெளிப்படுத்தி விடாதீர்கள் — திட்டத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது...''

"பம்பாய் கவர்னராகயிருக்கும் பிரகாசாவா, பண்டித நேருவின் நெருங்கிய நண்பரா, முன்பு டில்லியில் மந்திரியாகயிருந்தவரா, இப்படிச் சொன்னார்.''

"ஆமாம், பெரியய்யா ஆமாம்! அப்பேற்பட்டவர்களே, இப்படி நினைக்கிற அளவுக்கு இருக்கிற ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்டுவைத்துக்கொண்டு, அதற்கு 4800-கோடி வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, நாமெல்லாம் பட்டினி கிடக்க வேண்டும் என்கிறார்கள்.''

"அதோடு விடமாட்டார்கள் போல் தெரிகிறது, மணிமுடி! இன்று, டில்லியில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேசியதாக சேதி பார்த்தாயோ, பத்திரிகையில்...''

"என்ன பெரியய்யா!''

**"ஐந்தாண்டுத் திட்டத்துக்கு வேண்டிய பணத்தைப் பெறும் வகையில் மாகாணங்கள் புதிய வரிகள் சிலவற்றைப் போட நேரும், என்று கூறியிருக்கிறார், அந்தப் புண்ணியவான்.''**

"ஐயோ! அக்கிரமமாயுள்ளதே. சோற்றுக்கு இல்லாது, நோவும் நொடியும்கொண்டு அல்லாடும்நாம் இன்னும் அதிக வரிகட்ட நேருமா? அதுவும், புரியாத ஐந்தாண்டுத் திட்டத்துக்காகவா? பெரியய்யா! மூளை குழம்புகிறது, வருகிறேன்.''

★


சுவை மிளிரும் ஓவியங்கள்!
கற்கண்டு நிகர் ஏடுகள்!!

எமது புதிய வெளியீடுகள் :—

**உதய சூரியன்**
கலைஞர் மு. கருணாநிதி
விலை ரூ. 1-50

**எழுத்தாளன் காதலி**
பி. சி. கணேசன் விலை ரூ. 1-25
(மூவண்ண முகப்புடன்)

★

**மணிமகுடம்**
கலைஞர் மு. கருணாநிதி
விலை ரூ. 1-50

**ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்**
முரசொலி மாறன் எம். ஏ.,
விலை ரூ. 1-50

**அபிசீனிய அடிமை**
பி. சி. கணேசன் விலை ரூ. 1-00

தனிப் புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் 25 பைசா சேர்த்து எம். ஒ. அனுப்புக.

**முத்துவேல் பதிப்பகம்**
**77, மதுரைசாலை, திருச்சி-8**


6-ம் பக்கத் தொடர்ச்சி

நோயுற்ற அல்லது, பழுதுபட்ட உடலுறுப்புகளுக்கு மாறாக "உறுப்பு பாங்கி''யினின்றும் புது உறுப்புகளைப் பொருத்திக்கொள்ள இயலும்.

வாயைத் திறந்து பேசாமலே ஒருவர் மனத்தோடு மற்றொருவர் பேசிக்கொள்ளக்கூடும்.

அவரவர் உடலை வேண்டிய உருவத்தில் அமைத்துக் கொள்ள இயலும். சதைப் பிடிப்பாகவோ ஒற்றை நாடியாகவோ விரும்பியவாறு இருக்கலாம். பகலவன் ஒளியினின்றும் உணவு உண்டாக்கிக் கொள்ளலாம். கடல் நீரைக் குடித்து இளைப்பாறலாம்.

கணவனும் மனைவியும் கூடிப் பேசி ஆண் குழந்தை வேண்டுமா, பெண் குழந்தை வேண்டுமா, ஒற்றைக் குழந்தை போதுமா, இல்லை இரட்டை அல்லது மூன்று வேண்டுமா என்பதனைத் தங்கள் விருப்பம் போல் முடிவுகட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

மாத்திரைகளை உட்கொண்டால் அவை மனத்தில் ஏற்படும் உணர்ச்சி அலைகளைக் கட்டுப்படுத்திவிடும்.

இவ்வளவுக்குமேலாக எந்த மனிதனும் ஒரு வாரத்தில் எட்டு மணி நேரத்திற்குமேல் உழைக்கத் தேவையிராது.

என்று அந்தப் பத்திரிகைச் செய்தி சொன்னது.

சரி, நமக்குத்தான் மென்மை கிடைக்கவில்லை; நாமும் ஆற்றலாக இல்லை, நூறு ஆண்டுகளுக்குப் பின் பிறக்கும் மென்மைக்கும் ஆற்றலுக்கும் இப்படித்தானே வாழ்க்கை இருக்கும் என எண்ணி மகிழ்ந்தேன்.

உடனே இதெல்லாம் நடக்க இயலுமா என மயங்கினேன். ஆனால் இதைச் சொன்னவர்கள் யார் என்பதனைக் கண்டபோது 'நடக்கும்' என்ற நம்பிக்கை பிறந்தது. ஏனெனில் இதைச் சொன்னவர்கள் — வேதாந்திகள் அல்லர்—விஞ்ஞானிகள்! விஞ்ஞானம் ஒருமுறை இருமுறை தவறினும் மறுமுறை சொன்ன வண்ணம் நடக்கின்றது!

நேரில் ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதற்காக அமைந்த தனிப்பெருங்
கல்வி அரங்கம்:

# The School of English Learning

# ஆங்கிலக் கல்வி நிலையம்

**60, பிராட்வே--மண்ணடி--சென்னை-1**

## தமிழ்

## எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

# ஒரே வருடத்தில்

**இலக்கண ரீதியாக**

# இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

*சென்ற டிசம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட டிசம்பரில் முடிவடைகின்றன.*

## புதிய வகுப்புகள்

**டிசம்பர் 10-தேதி**

**ஆரம்பமாகின்றன.**

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

**கடைசி தேதி: 9-12-1957**

**இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.**

## முழு விபரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

---

**முக்கிய அறிவிப்பு:-** 16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். சென்னையில் உள்ளவர்கள் மட்டுமே நேரில் விண்ணப்பிக்கவும்.

---

**ஓரளவு** இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

# கொள்கைக் குழப்பம்!

M. S. வெங்கடாசலம் M.A.,

அவமானச் சின்னம்!

உதவாக்கரை மனிதர்!!

சமதர்மத்தின் சத்துரு!

சவுக்கால் அடித்துப் பாடம் புகட்டப் பட வேண்டியவர்!

பிச்சையெடுக்கப் புறப்பட்ட பெருமான்.

"ஐயனே, மெய்யனே, தாங்களின்றேல், தங்கள் உதவியின்றேல் எங்கள் நாடு உய்யாது; நலமெதுவும் ஏற்படாது" என்று இனித்துப் பேசி நாட்டை ஏளனத்துக்குள்ளாக்கியவர்.

இத்தனைக்குப் பிறகும் வெறுங்கையோடு திரும்பியவர்.

நாட்டின் நடுநிலைக் கொள்கையை அடகு வைத்திடத் துணிந்தவர்.

*இன்னோரன்ன சொற்கணைகள் பற்பல பாய்ந்தன, மத்திய நிதியமைச்சர் கிருஷ்ணமாச்சாரியின் மேல்! — சென்ற கிழமை நடந்த பாராளுமன்ற விவாதத்தின் போது!*

* * *

ஆத்திரக்காரர்!

அகம்பாவம் பிடித்தவர்!

நாவாலே நாட்டிற்கு நாசம் விளைவித்தவர்!

*அதே நாளில், அதே மன்றத்தில் இத்தகைய சொற்கணைகள் கிருஷ்ணமேனனைத் தாக்கின!!*

*நாட்டின் நடுநிலைமைக் கொள்கைக்கு குந்தகம் விளைந்திடும் நிலையில் இவர் நடக்கிறாராம்.*

* * *

மினு மசானி கிருஷ்ணமேனனைக் கண்டித்தார்.

டாக்டர் முகர்ஜி கிருஷ்ணமாச்சாரியைக் கண்டித்தார்.

ஆச்சாரிய கிருபாளினி இருவரையுமே கண்டித்தார்.

*இவர்களது கண்டனக்கணைகள் தான் மேலே தரப்பட்டிருப்பவை.*

*அமெரிக்காவில்—ஐந்தாண்டுத் திட்டத்திற்கெனக் கடன் கேட்கப் போன இடத்தில் — இந்தியாவுக்கும் கம்யூனிஸ்டு நாடுகளுக்குமிடையே இருக்கிற நல்லுறவுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற முறையிலே கிருஷ்ணமாச்சாரி பேசினார். பத்திரிகை நிருபர்களிடம் பேசும்போதும் அவ்வாறு பேசினார். இது அவர்மீதிருக்கின்ற குற்றச்சாட்டு.*

*அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் அளவு கடந்து தாக்கி, ஐ. நா. சபைக் கூட்டத்திலேயே பேசிவிட்டாராம் கிருஷ்ணமேனன்!*

நிதியமைச்சர் ரஷ்யாவுக்கு எதிராகப் பேசுகிறார்!

பாதுகாப்பு அமைச்சர் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் எதிராகப் பேசுகிறார்!

எனினும் இந்த இருவரையும் உள்ளடக்கி விளங்கிடும் அரசாங்கம் அல்லும் பகலும் பறைசாற்றி வரும் கொள்கையோ நடுநிலைமைக் கொள்கை!

*இத்தகைய கொள்கை வேறுபாடுகள் அமைச்சரவைக்குள்ளே ஏற்பட்டவுடன் அரசாங்கத்தின் கொள்கையை ஒப்புக்கொள்ளாத அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகிக்கொள்ளுதல்தான் ஜனநாயக முறை — சரித்திரம் காட்டுகின்ற வழிமுறை என்பதை எடுத்துக் காட்டி, இந்த இருவரிலே யாராவது ஒருவர் விலகவேண்டும் அல்லது விலக்கப்பட வேண்டும் என்று எடுத்துரைப்பதற்காக அல்ல நாம் இதைக் கூறுவது!*

*சொன்னாலும் இந்த மந்திரிகளா கேட்பார்கள்!!*

*ஏன் இத்தனை கொள்கைக் குழப்பங்கள் — எதனாலே இந்த அளவு கருத்து முரண்பாடுகள் தோன்றின — இத்தகு முரண்பாடுகள் விளைக்கின்ற இடர்கள் என்னென்ன — இவை ஜனநாயகத்தை எந்த அளவு பாதிக்கும் — என்பதை எண்ண வேண்டும், நலம் விரும்பிகள்.*

*

"தலைநகரில் அரங்கேற்றப்பட்ட அருமையான அரசியல் நாடகம் முடிந்தது—திரையும் விழுந்தது; எத்தனையோ போர்களிலும், போராட்டங்களிலும் ஈடுபட்டும், நாடகக் கடைசியிலே காயம் கூட இல்லாமல் மேடையிலே தோன்றுகிற கதாநாயகனைப்போல், விவாதத்திற்கு அடுத்த நாள் கிருஷ்ணமாச்சாரி தோன்றினார்" என்று 'மெயில்' ஏட்டில் (பெர்டினக்ஸ்) என்பவர் எழுதுகிறார்.

*விவாதத்தை நாடகம் என்பதன் மூலம், விவாதத்தில் பங்கேற்றவர்கள் வில்லன்களைப் போல, கதாநாயகனை ஒரு அறை அறைந்துவிட்டுத் தானே தரையில் விழுந்துவிடுவதைப்போல்— என்கிறார். காரணம்—கண்டனம் எழுப்பியோரின் கணைகள். ஆட்களை மறந்து பிரச்சனைகளை அணுகுகின்றமுறையினாலேதான் நல்ல முறையில் பிரச்னைகளைத் தீர்க்க முடியுமே தவிர, தனிப்பட்டவரைக் காரசாரமாகக் கண்டிப்பதிலே பலனில்லை. அது மட்டுமல்ல. அதனாலே பிரச்னைகள் மேலும் பெருகுவதற்கான வாய்ப்புகள்ஏற்பட்டுவிடுகின்றன.*

*காங்கிரசு அரசாங்கத்தின் கொள்கைக் கோணல்களை விளக்கிட, மசானியும் கிருபளானியும் முகர்ஜியும் முற்பட்டிருப்பார்களேயானால் நாட்டு மக்களுக்கு தெளிவும் விளக்கமும் ஏராளம் கிடைத்திருக்கும்.*

*கோணல்களைக் காட்டுவதென்று ஆரம்பித்தால், இவர்களுக்குக் கிடைக்கின்ற விஷயங்கள் ஏராளம்!*

*வெளிநாட்டு விவகாரங்களில் மட்டுமே அமைச்சரவையிலே கொள்கைக் குழப்பமும் கருத்து முரண்பாடும் என்பதல்ல — உள்நாட்டுப் பிரச்சனைகளிலும் அப்படித்தான் — என்பதனை யாரே அறியார்!*

அமெரிக்காவுக்குச் சென்ற நிதியமைச்சர் "ஆலைகளைத் தேசியமயம் ஆக்குவது எங்கள் திட்டமல்ல" என்கிறார் — அதே சமயத்தில் இங்குள்ள அமைச்சரொருவர் "அது தான் எங்கள் முதல் பணி" என்கிறார்.

கருத்தடை மிகமிகத் தேவை—அஃதில்லையேல் மக்கட்தொகை பெருகுவதைத் தடுத்திட இயலாது — வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் வழி பிறக்காது — என்று பண்டிதர் முழங்குகிறார்!

கருத்தடை சிசுகத்திக்கு ஒப்பானது—ஜனநாயகத்துக்கு முரணானது — சன்மார்க்கத்தின் சத்துரு—என்று இதோபதேசம் செய்கின்ற தலைவர்களையும் பார்க்கின்றோம்!

வெளிநாட்டு உதவியின்றேல் திட்டம் நிறைவேற்றப்பட முடியாது என்கிறார் ஒரு அமைச்சர்—"இல்லை! இல்லை! எப்படியும் நிறைவேற்றியே தீருவோம்" என்று மார் தட்டுகிறார் மற்றொருத்தர்!

திட்டத்தில் எந்தெந்தப் பகுதியை நிறைவேற்றுவது, எதையெதைக் கைவிடுவது என்று முடிவு செய்துவிட்டோம் என்கிறார் பண்டித மிஸ்ரா!

"இல்லை! இல்லை! எந்த முடிவுக்கும் நாங்கள் இதுவரை வரவில்லை. இன்னும் யோசித்துக்கொண்டிருக்கிறோம்" என்கிறார் எஸ்.கே. படீல்.

திட்டத்தின் முக்கிய பகுதி ஆலைத் தொழில்தான் என்று விளக்கம் தருகிறார் மிஸ்ரா—ஆனால் விவசாய அபிவிருத்தியும் நீர்ப்பாசனத் திட்டங்களும்தான் முக்கியமென முழங்குகிறார் டாக்டர் இராதா கிருஷ்ணன்!

இத்தனையையும் படம்பிடித்து 'இதோ பாரீர்' என்று நாட்டு மக்களுக்குக் காட்டியிருந்தால் எந்தக்காங்கிரசு அமைச்சர், "இது தான் எங்கள் திட்டம்! இதுதான் எங்கள் கொள்கை" என்று நாட்டுமக்கள் மத்தியிலே துணிவோடு பேசமுடியும்?

*

இத்தகைய கொள்கைக் குழப்பங்களும் கருத்து முரண்பாடுகளும், பொறுப்பு வாய்ந்த பதவியிலிருக்கின்றவர்களிடையே தோன்றுவதற்கான காரணங்கள் இரண்டு.

முதற் காரணம் காங்கிரசுக் கட்சிக்கென்று நிலையான கொள்கையோ திட்டமோ இல்லை.

ஆவடியிலே கூடினர்—சமதர்மப் பாணியில் சமுதாயம் அமைக்கப்படுமென்றனர்! அமிருதசரசில் கூடினர்—சமதர்மப் பாதையிலே சமுதாயம் அமைக்கப்படும் என்று திட்டம் தீட்டினர்.

'பாதை'க்கும் 'பாணி'க்கும் இருக்கின்ற வேறுபாடு சாதாரணமானதல்ல—"இது குதிரை" என்பதற்கும், இது குதிரையைப் போல" என்பதற்கும் இருக்கின்ற வேறுபாட்டினைப் போன்றது.

"சமதர்மப்பாதை என்கின்றீரே, ஆலைகள் தேசிய மயமாக்கப்படுமா?" என்று கேட்டால், கேட்கின்ற இடத்திற்கும் ஏற்றவாறல்லவா பதில்கள் கிடைக்கின்றன?

இதற்கு என்ன பொருள்? நிலையான, திட்டவட்டமான கொள்கையும் கோட்பாடும் காங்கிரசுக்கு இருக்கிறதென்று பொருள்? இன்று இரவு ஒருவனுடன், நாளை மற்றொருவனுடன், மறுநாள் மூன்றாவது ஆளுடன் உலாவரும் மங்கைக்கு மணாளன் இருக்கிறானென்று பொருள்? எனவே இது முதற் காரணம்.

இரண்டாவது காரணம் எவரையும் இழுத்தணைத்து, எப்படியாவது கட்சியின் பலத்தைப் பெருக்கிடவேண்டும் என்னும் ஆர்வத்தில், இருக்கின்ற ஒன்றிரண்டு திட்டங்களையும் ஒப்புக்கொள்ளாதவரையும் கட்சிக்குள்ளே கொண்டு வருகின்ற அரசியல் சூதாட்டம்!

ஆலை அதிபரானாலும், அன்னக்காவடியானாலும்—குபேரனானாலும், கும்பி கழுவிட வழியற்றவனானாலும்—காங்கிரசின் திட்டங்களைப் புரிந்து கொண்டாலும், இல்லையென்றாலும் — அவற்றை ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ள மனமில்லையென்றாலும் —காங்கிரசிலே இடம் பெறலாம் என்ற நிலை இருந்திடும்போது, கருத்து முரண்பாடுகள் இல்லாமல் என்ன செய்யும்?

ஆலை அரசர்களையும், ஆயிரக்கணக்கான வேலி நிலச் சொந்தக்காரர்களையும், வாணிப முதலைகளையும், வட்டிக்கடைத் திமிங்கிலங்களையும்கொண்ட கட்சி எத்தனை நாளைக்கு சமதர்மப் பாதைதான் தனது இலட்சியம் என்று சொல்லிக்கொள்ள முடியும்? எவ்வளவு காலத்துக்கு அவர்கள் அனுமதிப்பர்?

எனவேதான் இத்தகைய கொள்கைக் குழப்பங்களும், கருத்து முரண்பாடுகளும் தோன்றுகின்றனவே தவிர வேறென்ன?

இவ்வளவு உண்மைகளும் பாராளு மன்றத்திலே எடுத்து விளக்கப்பட்டிருந்தால் எவ்வளவோ பலன் ஏற்பட்டிருக்கக் கூடும்! அதனால்தான்,

**"இந்த விவாதத்தில், மக்கள் மனதில் பதிகின்ற அளவுக்கு, ஆளும் கட்சியின் கொள்கைகளைக் கண்டிக்கத் தவறிவிட்டனர், எதிர்க்கட்சியினர்! அதுமட்டுமல்ல! நிதியமைச்சர் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டதற்கான காரணம் என்ன என்பதைப் போன்றவற்றில், அரசாங்கம் தன்னைத்தானே விளம்பரப்படுத்திக் கொள்வதற்கு அருமையானதொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துவிட்டனர்'** என்று பெர்டினக்ஸ் (Pertinax) என்பவர் 'மெயில்' இதழில் எழுதுகிறார்!!

★

## தி. மு. க. பொதுக்கூட்டம்

11—12—57 புதன்கிழமை மாலை 6 மணிக்கு சோளிங்கபுரம் பெருமாள் கோவில் முன்னிலையில்,

ஆர். என். அரங்கநாதன், பி. ஏ. தலைமையில்

**சி. என். அண்ணாதுரை**

மா. கி. தசரதன், எம். ஏ.

சி. வி. இராசகோபால்

சி. எம். வேணு

சி. வி. எம். அண்ணாமலை

பேசுவார்கள்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

"அவர்கள் சொல்வதா! நாம் கேட்பதா!" — என்று எண்ணுகின்றனர், அதன் காரணமாகச் சட்டம் என்கிற சந்துபொந்துக்குள் நுழைந்து, அடக்குமுறையை வீச முனைகின்றனர்.

காங்கிரசாட்சி, பீடம் ஏறிய நாள் முதல், இந்த அலங்கோலத்தை நாடு கண்டு வருகிறது. அவர்தம் போக்குக்கு, 'கடிவாளம்' ஏதுமில்லை, அரசியல் நெறியினையும் அவர்கள் உணர்ந்ததாய்த் தெரியவில்லை, என்பதால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் 'தேர்தல்' பாதையில் நுழைந்தது! ஆட்சிக்கோர் கடிவாளமாக, அவர்களது மமதைத் தேருக்கு ஒரு முட்டுக்கட்டையாக விளங்கிடப் பலமுள்ள எதிர்க்கட்சி, சட்டசபையில் இயங்கவேண்டும் என்று எண்ணியது. ஆனால், அந்தோ, நமது நோக்கத்துக்கு மாசு கற்பிக்கப்பட்டது. மனம் போனபடியெல்லாம் நம்மை வாழ்த்த வேண்டியவர்கள் வசை பாடினர். இதன் காரணமாக, தேர்தல் காலத்திலே, காங்கிரசாரின் கண்டனங்களை மட்டுமா! திராவிட கழகத்தாரின் சீற்றத்தையும் சமாளிக்க வேண்டியிருந்தது நாம்!! தி. கழகத்தவரும், காங்கிரசாரும் ஒன்று சேர்ந்துகொண்டு, நம்மை எதிர்த்தனர். அதன் விளைவாக, காங்கிரஸ், அதிக இடங்களைப்பெற வாய்ப்புக்கிடைத்தது—அதோடு 'தலைக்கனமும்' அடைந்தது — இன்று தடிதூக்கி நிற்கும் பயில்வானாகக் காட்சியளிக்கிறது!!

"திராவிட கழகம்தானே! அவர்கள் செய்கிற காரியங்களைப் பார்த்தீர்களோ? மக்கள் மனதில் அனுதாபமா ஏற்படும்? ஒருபோதும் மக்கள் ஆதரவளிக்கமாட்டார்கள்", என்று அரசுபீடத்திலமர்ந்திருப்போர், கருதக்கூடும். கண்டனமும், கேலியும்கூடக் கிளப்பக்கூடும். அவர்களைப் பார்த்து நாம் கேட்கிறோம்—"ஐயன்மீர்! நீங்கள் கருதுவது சரியாகவேகூட இருக்கட்டும். ஆனால் ஆயிரக்கணக்கான வாலிபர்களையும், தாய்மார்களையும் கொண்டு போய்ப் பூட்டி, ஆறு மாதம், ஒன்பது மாதம் என்று அனுபவிக்கச் செய்கிறீர்களே. அதை, மக்கள் விரும்புவார்கள் என்றா எண்ணுகிறீர்கள்? ஒருபோதும் இல்லை! அடக்குமுறையையும், சிறைக்கதவுகள் அடிக்கடி திறந்து மூடப்படுவதையும், நாடு விரும்பாது; நல்லோர் அனுமதிக்கமாட்டார்கள்!!

ஆயிரக்கணக்கானோர் அணிவகுத்து, வரிசை வரிசையாகச் சிறைக்கோட்டம் செல்லுவதைக் கண்டும் "என்ன இது? ஏனிப்படி?", என்கிற கேள்விகளை எழுப்பாமற் போகார். நாட்டில் நேற்றுவரை, சட்டத்தை மதித்து நடந்தவர்கள், இன்று ஏன் சட்டத்தை மீறுகிறார்கள்—சிறைச்சாலை நோக்கிச் செல்லுகிறார்கள் என்பதை மக்கள் கவனிக்கத்தான் செய்வார்கள். இப்படியொரு கட்டம் ஏற்பட்டு, ஏராளமானோர், என்ன காரணத்தால் சிறைக்குச் செல்லுகிறார்கள் என்று எண்ணாமலாயிருப்பார்கள் மக்கள்? திராவிட கழகத்தின்மீது, அடக்குமுறை வீசப்பட வீசப்பட, இருட்டடிப்பு அகலும்—இதுவரை விஷயமறியாமலிருந்தவர்கள்கூட அவர்களைப்பற்றி அறிய வாய்ப்பு ஏற்படும்—எதை மூடிமறைக்க ஆட்சியினர் எண்ணுகின்றனரோ, அது, இதனால் நன்றாகத் தெரியும்! அறியாதோரும் அறிந்துகொள்ளவே செய்வர்!!

ஒன்றை நாம் கவனமூட்ட விரும்புகிறோம், அரசியல் சட்டத்தையும் இன்ன பிறவற்றையும் எரிப்பதென்கிற செயல்கள் மூலம், விரும்பிய கோரிக்கைகள் கிடைத்துவிடும் என்பது தி. க. -வின் கருத்தாக இருக்கமுடியாது. கேளாக்காதினராக இருக்கும் ஆளவந்தாரின் கவனத்தை ஈர்க்கும் ஒரு 'அதிர்ச்சி வைத்தியம்' என்போம்! தி. க. விரும்பும் சாதி ஒழிப்புக் கோரிக்கையைப் பற்றிக் காங்கிரஸ்காரர்களும் சண்டப் பிரசண்டம் செய்திருக்கிறார்கள்—சாதி ஒழிப்புக் குறித்து காங்கிரஸ் எந்தளவுக்குப் பேசி வந்தது என்பதையும், அதே கோரிக்கையை விடுக்கும் இன்னொரு கட்சிக்கு அது வழங்கும் 'நீதி'யையும் எண்ணிப் பாராமலிருக்க மாட்டார்கள், மக்கள். தன்னுடைய தள்ளாத வய்தில், 70 - வயதுக்கு மேற்பட்ட, பெரியார், கத்தியை எடுங்கள், நெருப்பை வீசுங்கள் என்று சொல்லுகிறாரென்றால், ஏன் அப்படிச் சொல்லுகிறார்—என்ன காரணம் அவர் சொல்லுவதற்கு—என்பதை, அதிகாரபீடத்தில் அமர்ந்திருப்போர் எண்ணியாவது பார்க்க வேண்டாமா? அமைதியைக் காக்கிறோம், சட்டத்தை நிலைநாட்டுகிறோம் என்கிற பெயரில், சுதந்தர வீரர்கள், பிரிட்டிஷாரையும் மிஞ்சக்கூடிய அளவில் நடந்துவருகிறார்கள்! சாதியை ஒழிக்கவேண்டும் என்பதுமற்றி தி. க. சொல்லி வரும்போதெல்லாம், இவர்கள் காட்டியது என்ன? சிரத்தையாவது காட்டியதுண்டா? அல்லது, "இல்லை, இதோ நாங்கள் சாதியை ஒழித்துக்கொண்டுதானே இருக்கிறோம்", என்றாவது சொன்னதுண்டா!! கிடையாது, அதுமட்டுமல்ல, இப்போதாவது அதற்கான உறுதிமொழியையும் அளிக்கிறார்களோவெனின் இல்லை. அடிபணிந்து, வணங்கி, வேண்டுகோள் விட்டபோது அலட்சியத்தைப் பதிலாகத் தந்தனர் ஆட்சியாளர்கள். அவர்கள்தம் அலட்சியத்தை மாற்றிக் கவனத்தை இழுக்கும் செயல்களில் முற்படும்போது, 'தடி'யைத் தூக்கிக்கொண்டு பாய்கின்றனர்!!

சட்டப் புத்தகத்தை எரித்துவிடுவதால் சாதி ஒழிந்துவிடும் என்று யாரும் கூறமாட்டார்கள்; ஆனால், அந்த வழி செல்லுமளவுக்கு அரசு தன் அலட்சியப் போக்கைக் காட்டி, நாட்டின் நல்ல பெயருக்கு ஊறுசெய்துவிட்டனர் என்றே நல்லோர் கூறுவர்.

தி. மு. க-வைப்பற்றியும், அது தேர்தலில் ஈடுபட்டது குறித்தும், என்னதான் சொன்னாலும் அதை நாம் தாங்கிக்கொண்டு, இந்தச் சமயத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். இப்படி, இஷ்டம்போல் ஆடும் ஆட்சியாளர்களுக்கு, தட்டிக் கேட்க யாருள்ளார்கள் என்று நடக்கும் ஆள்வோருக்கு, புத்தி புகட்டிட ஜனநாயக வழிதான் நல்ல வழியாகும். காங்கிரசும் தி. கழகமும் சேர்ந்து எதிர்த்தும், சில பல இடங்களில் நாம் பெற்ற வெற்றியின் காரணமாகத்தான் சட்டசபையில், தவறை எடுத்துரைக்கும் சந்தர்ப்பமாவது கிடைத்தது. எதிர்பார்த்ததுபோல, எல்லா இடங்

களிலும், நாம் வெற்றிபெற்றிருந்தால், எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்!

ஓட்டு முறையில் பலம் பெற்று ஆள்வோருக்குப் பாடம் புகட்டும் வழியினைப்பற்றி, அமைதியாகச் சிந்திக்க நேரமில்லை, தி. க-வுக்கு. ஆனால், இன்றில்லாவிட்டாலும், கூடிய விரைவில் நாம் எடுத்த பாதையே சரியான பாதை என்கிற முடிவுக்கு, அவர்களும் வராமற்போகமாட்டார்கள். ஆனால் இப்போது, நமக்கு விளக்கம் தரவேண்டியது, ஆட்சியிலிருப்போராகும். அவர்களைப் பார்த்துக் கேட்கிறோம் —அடக்கு முறையால் என்ன சாதிக்க முடியும் என்றெண்ணுகிறீர்கள்? சட்டம் கொண்டுவந்தீர்களே —அதனால், சிறைச்சாலை நிரம்பியதைக் காணமுடிகிறதேயன்றி, உங்கள் எண்ணம் நிறைவேறவா செய்தது? மீண்டும் மீண்டும் இந்த அடக்கு முறைப் பாதையையா நம்பி வாழப்போகிறீர்கள்—இதனால். என்ன பயன் கிடைக்கமுடியும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? கேள்விகளுக்குப் பதிலை எதிர்பார்க்கவில்லை, நாம். ஆள்வோர், சிந்திக்க வேண்டும்.

அரசு, தான் செய்த தவறைத் திருத்திக் கொண்டு, நல்ல பாதையில் வந்திட வேண்டும். பிரச்னையை, கூண்டிலேற்றுவதன் மூலம், தீர்த்துவிட முடியாது. 'கோர்ட்டுகளை' நாடுவதற்குப் பதில், நல்லெண்ணக் கூடத்துக்கு கொண்டு வருவதன் மூலமே. பரிகாரம் காணமுடியும். தடியல்ல; இருதயம்!—தேவை, இப்போது.

ஆட்சிப்பீடத்திலமர்ந்திருப்போர் போலீசை மட்டுமல்ல, நல்லெண்ணத்தையும் மாற்றாரின் மனம் அறியும் தன்மையையும்கூட, கைவசம் வைத்திருக்க வேண்டும். ஆளும் கட்சி, நல்லோரின் ஆசியையும், மக்கள் மன்றத்தின் திருப்தியையும் பெற வேண்டுமாயின் இது மிகமிக அவசியம். கதருடுத்திய நமக்கு, எப்படியோ 'காக்கி உடையணிந்த' படைகள் கிடைத்துவிட்டது எனும் தைரியம் போதாது, மக்கள் மன்றத்தின் பிரச்னைகளைச் சமாளிப்பதற்கு. அரசியல் நெறியும் ஆய்ந்தோய்ந்து பார்க்கும் பண்பும் தேவை; படையல்ல!! இந்த நன்னெறி, இவர்கள் காதில், ஏறுமா? எவ்வளவோ சொன்னோம், எங்கே கேட்டார்கள்! அதிகார போதையன்றோ, ஆட்டிப்படைக்கிறது — இல்லையென்றால், சட்டசபையில் நாம் விடுத்த எச்சரிக்கையைக் கேட்டிருக்கமாட்டார்களா? சாதி ஒழிப்புபற்றி பெரியார் அவர்களை நாடியாவது, என்ன சொல்லுகிறீர்கள், எப்படி நாங்கள் நடக்கவேண்டுமெனச் சொல்கிறீர்கள் என்கிற கருத்தையாவது அறிந்திட முயன்றிருக்கமாட்டார்களா? இவர்கள் கேட்டிருந்தால், பெரியாரா மறுத்திருப்பார் — அதிலும், காமராசர் மீது, தனியன்பு கொண்டவராயிற்றே, அவர்!!

'தடி' உள்ளது எனும் தைரியம், மெஜாரிடி அதிகம் உள்ளோம் என்கிற போக்கு, நாம் எச்சரித்தும், சட்டம் கொணரச்செய்தது—அந்தச் சட்டத்தின் மூலம், ஆயிரக்கணக்கான திராவிடக் கழகத் தொண்டர்களை அனுப்பியிருக்கின்றனர் சிறைக்கு! நேற்றுவரை, காமராசருக்கு மலர்மாலைகளும் வாழ்த்துக்களும்கூட அளித்த உருவங்களை, அதே உத்தமர் இன்று, ஆறு மாதம், ஒன்பது மாதம் என்று தண்டனைபெற்றுத்தந்து, விலங்குபூட்டிக், கொண்டுபோய் அடைத்திருக்கிறார் சிறைக்குள்!! குழந்தைகளுடன் சென்ற தாய்மார்கள்—குமரிவயதெனினும் கொடுமைகண்டஞ்சாது சென்ற சகோதரிகள்—சாதி ஒழிப்புக்காக நல்லதோர்பணியிலீடுபடுகிறோம் எனும் நம்பிக்கையில் சிறைக்கோட்டம் சென்றிருக்கும் வீரக்காளையர் — ஆகியோரின், ஆர்வம், வீணாகாது. அவர்கள் அனைவரது, பாராட்டுதலையும் பெற்றிருக்கவேண்டிய காமராசர் அரசு, சிறையையும் விலங்கையும் பரிசாக அளித்திருக்கிறது—ராஜ மாளிகையில் விருந்து வைக்கவேண்டிய அளவுக்கு இந்த ஆட்சிக்கு 'பலம்' தேடிக்கொடுத்தவர்களை, சிறைச்சாலைக்குள் 'தட்டு' தூக்கச் செய்திருக்கிறது, காமராசர் அரசு. அரசியல் விசித்திரமட்டுமல்ல, வேதனையும் என்போம்! அனுதாபம் காட்டியிருக்கலாம், அணுகிப் பேசித் தவிர்த்திருக்கலாம், 'வேண்டாம் ஐயா' என்று வேண்டியிருக்கலாம்,—பெரியார் அவர்கள் இவர்களில் பலர் அரசியல் பள்ளியின் மாணவர்களாக இருந்தபோதே தலைவராக இருந்தவர்; அவரிடம் செல்வதால் இவர்கள் கீர்த்தி ஒன்றும் பழுதுபட்டு விடாது--அதெல்லாம், தேர்தலின் போது தேவைப்பட்டது! இப்போதோ, ஒரே ஒரு வேண்டுகோள் — சாதி ஒழிப்பைப்பற்றி என்ன செய்யப்போகிறீர்கள் என்று விடுத்த வேண்டுகோளுக்கு—பதிலும் தராதிருந்துவிட்டு, ஆத்திரமடைந்த பெரியார் 'அதிர்ச்சி வைத்தியம்' செய்யக் கிளம்பியபோது, நல்லெண்ணத்தைக் காட்டி அவரை நாடிடவும் மறுத்து, சட்டமும் செய்து, ஆயிரக் கணக்கானவர்களைச் சிறைக்குள்ளும் தள்ளி, சிங்காரப் பவனி வருகிறார்கள், இந்த அமைச்சர்கள்! இந்தப் போக்கு, என்றும் நல்லதுமல்ல; நல்லாட்சிக்கு உகந்ததுமல்ல என்று எச்சரிக்கிறோம்.

இலட்சியத்துக்காக அடக்குமுறைகளைத் துச்சம் என எண்ணும் ஆயிரக்கணக்கான வீரர்களின், ஆசைக்கனவு, நனவாகும் நாள, இன்றில்லாவிடினும் ஒருநாள் வந்தே தீரும். அடக்குமுறைகள் ஆயிரம் ஏவப்பட்டாலும் அவர்கள் விரும்பும் சாதியில்லாச் சமூகம் ஒருநாளைக்காவது உருவாகியே தீரும், என்பதையும் ஆதிக்க அரசினர் உணரவேண்டும். ஒருபோதும், 'தடி' பலனளிக்காது! இதயம்தான் வெல்லும்!!

# உரிய பங்கு!

வெளி நாடுகளுக்குச் செல்லும் இந்தியப் பண்பாட்டுத் தூதுக் குழுக்களில் தமிழ்நாட்டின் கலையுகைஅறிஞர்க்கு உரியபிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென திருச்சி நாடகக் கலைஞர்கள் சங்கம் இந்திய அரசினர்க்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இச்சங்கத்தின் ஆறாவது ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்த தமிழ்நாட்டின் சிறந்த நாடகக் கலைஞராகிய திரு. டி. கே. சண்முகமும் இதே கருத்தை வற்புறுத்தியுள்ளார். வெளிநாடுகளுக்குச் செல்லும் தூதுக்குழுக்களில் இதுவரை தமிழ்க் கலைஞர்க்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடத்தேவையில்லை. அத்தூதுக் குழுக்களின் பட்டியலே இந்த உண்மையை வெளிப்படுத்திவிடும். இந்தியாவில் பழைமையும், பெருமையுமுடைய உயர் தனி நாகரிகம் தமிழர் பண்பாடு. ஆகவே இந்தியப் பண்பாட்டின் முக்கிய கூறாக விளங்கி வருவது இது. தமிழர் நாகரிகம் முத்தமிழ் மூலம் கலை உருவில் உள்ளுறைந்து உயிர்ப்புடன் உலவிவருகிறது. எனவே முத்தமிழ்த் துறையில் பயிற்சியும், தேர்ச்சியும் பெற்ற அறிஞர்கள் இந்தியத் தூதுக் குழுவில் இடம் பெற்றாலேயே இந்தியாவின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் உண்மையான குழுவாக அது விளங்க முடியும். அத்தகைய குழுக்கள் மேனாடுகளுக்குச் சென்றால் இந்தியாவின் உண்மையான பொதுப் பண்பாட்டினைச் சரியான கண்ணோட்டத்துடன் வெளிஉலகம் உணரமுடியும். இல்லாவிடில் வெளிநாட்டவர் இந்திய நாகரிகத்தின் ஒரு சிறு பகுதியையே அறியமுடியும்; முழுப் பண்பாட்டுப் பொலிவழகைக் கண்டு பயனுற முடியாது. அத்தகைய குழுக்களால் இந்திய நாகரிகத்தினை முழு அளவில் பிரதிபலிக்க முடியாது; ஆகவே நமது நாட்டுப் பண்பாட்டின் முழு உருவத்தை வெளியார் காணமுடியாது. அப்படியானால் கலைத் தூதுக்களை அனுப்புவதன் முழுநோக்கம் எப்படி ஈடேறும்? ஆகவே இனியாகிலும் இந்திய அரசினர் இத்துறையில் கவனம் செலுத்தி ஆவன செய்தல் வேண்டும். ஆனால் மற்றொன்றும் முக்கியம். தமிழர்க்குப் பிரதிநிதித்துவம் தருவதாகக் கூறி, தமிழ்நாட்டிலுள்ள எவருக்காவது இடமளிப்பதில் பயனில்லை. தமிழ்க் கலையுலகத்தின் உண்மையான பிரதிநிதிகளுக்கு இடம் கிடைக்கவேண்டும். இத்தகைய நிலை ஏற்படச்செய்வதற்குத் தமிழ்க் கலைஞர்கள் செய்யும் முயற்சிகளுக்கு நமது மாநில அரசினரும் உறுதுணையாய் இருந்து உதவி புரிதல் இன்றியமையாதது.

—"தமிழ் நாடு"

# இன்னொரு 'இடி'!

கைத்தறிக்குத் தந்து வந்த 'ரிபேட்' தொகையை நிறுத்தி விட இருப்பதாக டில்லி, அறிவிக்கிறது! கைத்தறியை மெல்ல மெல்ல அழித்துவிடும் நோக்கம் கொண்ட கனுங்கோ எனும் டில்லி அமைச்சர், இத்தகவலை இந்த கிழமை அறிவித்துள்ளார்!!

உயிருக்கு மன்றாடுவோருக்கு ஒரு வாய் கவளம் சோறுபோடுவது போன்ற உதவிதான் 'ரிபேட்' என்றாலும், அதனால் கைத்தறி வளர்ச்சிக்கு ஓரளவு ஊக்கம் ஏற்பட்டுள்ளது என்பது யாவராலும் மறுக்க முடியாத ஒன்றாகும். மில் துணிமீது வசூலிக்கப்படும் 'செஸ்' நிதியிலிருந்து கைத்தறி துணி வாங்குவோருக்கு ரூபாய்க்கு 1½-அணா 'ரிபேட்' வழங்கப்பட்டு வருகிறது.

இப்போது இதுவும் ஒரு அணாவாகக் குறைக்கப்பட்டு விட்டது! இதுபற்றியே, அதிருப்தியும் கண்டனமும் எங்கும் இருக்கும் நிலையில், இப்போது கனுங்கோ அறிவிக்கிறார், இத்திட்டமே விரைவில் கைவிடப்படும் என்பதாக!!

கனுங்கோ, கைத்தறியைக் கொஞ்சங் கொஞ்சமாக ஒழித்து விட்டு, விசைத்தறிக்கு ஊக்கமளிக்கவேண்டுமெனும் கருத்துக்கொண்டவர். அந்த மகானுபாவருக்கு, எப்படி கைத்தறியின்பால் அன்பு சுரக்கும்? உயிருக்கு மன்றாடுவதையும் கழுத்தைப் பிடித்து நொறுக்கிடும் யோசனையை வெளியிட்டுள்ளார்; இப்போது! 'ரிபேட்' எடுபடப் போகிறதாம்!!

இதனால் கைத்தறித் துணியின் விற்பனை, நிச்சயமாகப் பாதிக்கப்படும். மில் துணியோடு கைத்தறியால் போட்டியிட இயலவில்லை என்கிற காரணத்தால்தான், இந்த 'சலுகை' அளிக்கப்பட்டு வருகிறது. இதுவும், மறுக்கப்பட்டால், புலி பாயும், ஆடு சாகும்! மில் ஓங்கும்! தறி, சாயும்!

முன்பைவிட இப்போது ஓரளவு கைத்தறித் துணி விலை போகிறதென்றால், நம்மைப் போன்றோர் தறித்துணியை கட்டுவது எனக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதும், இயலாதவர்கள் விலை சகாயமாகயிருப்பதால் தறித்துணியை வாங்க ஆசைப் படுவதுமேயாகும். ரிபேட் எடுபட்டால், விலை அதிகமாகும்! நிச்சயம் விற்பனை குறையும்!

எனவே, இந்த யோசனையை டில்லி கைவிடும்படி செய்யுமாறு, தறியாளர்கள் கிளர்ந்தெழ வேண்டும். தறியாளர்களின் சங்கங்கள் முயற்சித்தல் வேண்டும்.